# யா/சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி
## பரிசளிப்பு விழா
## 2011



## கல்லூரியின் ஸ்தாபகர்
## நினைவு உரை
## 11.10.2011

யாழ் குடாநாட்டின்
தரைக்கீழ் நீர்வள
பாதுகாப்பு......



**எந்திரி. நவரட்ணம் சுதாகரன்**
B.Sc.Eng (Hons), C.Eng, MIE (SL)
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சிப் பிராந்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி Ridgeway Hall ன் கம்பீரமான முகப்புத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாம் வல்ல தேடிவந்த விநாயகரை மனதில் நினைத்து......**

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் இவ்வாண்டுக்கான பரிசளிப்பு விழாவுக்கும் கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் அவர்களின் நினைவுப்பேருரை நிகழ்விற்கும் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்புக்குமுரிய கல்லூரியின் முதல்வர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களே! மற்றும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தலைவர் கலாநிதி A.N.கிருஸ்ணவேணி அவர்களே! விசேட விருந்தினராக சபையை சிறப்பித்துக் கொண்டிருக்கும் சங்கானை பிரிவு கல்வி அதிகாரி திரு.துரைஎங்கரசு அவர்களே! சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருக்கும் இளைப்பாறிய பிரதி அதிபர் திரு.வி.சண்முகநாதன் அவர்களே! ஏனைய அதிதிகளே! இந்நிகழ்வில் பங்குபற்ற வந்திருக்கும் பாடசாலை சமூகத்தினர்களே! பரிசளிப்பு விழாவின் போது பரிசில்களை பெற ஆவலுடன் வீற்றிருக்கும் மாணவ மாணவிகளே மற்றும் சபையிலுள்ளவர்களே அனைவருக்கும் எனது காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்வில் கல்லூரியின் ஸ்தாபகர் நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் அவர்களை நினைந்து உரையாற்றுமாறு எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசிரியரான முதல்வரவர்கள் என்னை கேட்டுக் கொண்டபோது இச்சிறப்புரையை ஆற்றக் கூடிய புலமை என்னைப் போன்ற பொறியியல் துறை சார்ந்தவர்களிடம் எதிர்பார்ப்பது குறிப்பாக ஆசிரியர் திரு.ந.சிவசண்முகமூர்த்தி அவர்கள் போன்றவர்களும் பல்கலைக்கழகத்தின் அல்லது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள்தான் மிகவும் பொருத்தமானவர்கள் என்று கூறிய போதும் எமது முதல்வர் இந்த உரையை ஆற்றுவதற்கு நீங்கள் தகுதியுடையவர் என்றும் ஒரு விக்டோரியன் தான் இதனை ஆற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றும் எனக்கு வலுச்சேர்த்தார். அவருடைய நல்லாசிகளுடன் இந்த உரையை ஆற்றலாம் என உங்கள் முன் இவ்வரிய சந்தர்ப்பத்தில் விழைகின்றேன்.

இக்கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் அவர்கள் இந்தக் கல்லூரியை 1876ஆம் ஆண்டு ஸ்தாபித்த கால சூழ்நிலையையும் தற்போதைய நவீன யுகத்தையும் நினைத்துப் பார்க்கையில் முதலியார் அவர்களின் அர்ப்பணிப்பான தூய, தூர நோக்குள்ள சமூக சிந்தனை எம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. தற்காலத்தில் இவ்வாறான சிந்தனைகளை நினைத்துப் பார்க்க முடியாது.

கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் அவர்கள் யாழ் குடாநாட்டின் பழம் பெரும் கிராமமான சுழிபுரத்தின் மத்திய பகுதியை பிறப்பிடமாக கொண்டவர். இவர் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வியின் மோகத்தால் கவரப்பட்டு மெக்கன்சி கனகரட்ணம் என்ற கிறிஸ்தவ பெயருடன் கிறிஸ்தவ பாடசாலை ஒன்றிலேயே தனது கல்வியைக் கற்றுப் பூர்த்தி செய்துகொண்டவர். அக்காலத்தில் அவர் ஒரு சிறந்த கல்விமானாகவும், பெரியாராகவும் விளங்கினார். ஆங்கில பாடசாலையில் கல்வி கற்று நீதிமன்றத்தில் முதலியாராகவும், கச்சேரியில் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார். இவ்வேளையில் மாணவர்களின் நலன் கருதி தன்னுடைய வீட்டில் ஆங்கிலக் கல்வியை இலவசமாக புகட்டி வந்தார். சில வேளைகளில் இரவு உணவை வழங்கியும் கூட பாடங்களை கற்பித்தார். அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயம் வேகமாக பரவத்தொடங்கியிருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால் அதே நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாகத் தோன்றியவர் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகநாவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப ஆங்கில மொழி மூலக் கல்வியையே ஆங்கிலேயர் அதிகம் பயன் படுத்தினர். அக்கல்வி முறைமையால் பெரும்பாலான சுதேசிகள் ஈர்க்கப்பட்டு மதம் மாறுவதைக் கண்டு ஆறுமுக நாவலர் மனம் வருந்தினார். இந்து சமயச் சூழலில் ஆங்கில மொழிக் கல்வியை வழங்குவதன் மூலம் அத்தகைய மத மாற்றங்களைத் தடுக்கலாமென எண்ணினார். ஆதலால் அத்தகைய இந்து - ஆங்கில மொழிப் பாடசாலைகளை அமைப்பதிலும் ஆர்வம் கொண்டார். நாவலரின் முயற்சிக்குப் பலர் ஒத்துழைப்புக் கொடுத்ததன் பயனாக யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் இந்து ஆங்கில மொழிப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இம்முயற்சிக்கு முதன்முதலாக முழுவடிவம் கொடுத்த எமது ஸ்தாபகர் சுழிபுரம் இந்து ஆங்கிலப் பாடசாலையை (Chulipuram Hindu English School) 1876 ஆம் ஆண்டு நிறுவினார். இந்தப் பாடசாலைதான் தற்போது நாம் காணும், கல்வி கற்கும் இன்றைய விக்ரோறியா கல்லூரியாகும்.

அக்காலத்தில் ஒரு இந்து ஆங்கிலப் பாடசாலையை நிர்வகித்து நடாத்துவது மிகக் கஷ்டமாக இருந்தாலும், முதலியார் அவர்கள் பாடசாலையைத் திறமையாக நடாத்தி வந்துள்ளார். யாழ். இந்து சமயப் பெரியார்களின் உதவி மட்டுமன்றி, அவர் கல்வி கற்ற அமெரிக்க மிசனைச் சேர்ந்தவர்களின் உதவியும் கிடைத்த காரணத்தினால் இம் முயற்சி வெற்றி கொடுத்தது. இவர் பெருமை பற்றி பாடசாலைச் சரித்திரமே கூறும். அப்பொழுது ஆற்றல் மிகு இந்திய அதிபர் ஒருவரின் நிர்வாகத்தில் பாடசாலை இயங்கி வந்திருக்கிறது. முதலியார் கனகரத்தினம் அவர்களுக்கு, அவருடைய சகோதரர் துரையப்பா, புதல்வர்களான செல்லப்பா, இராசசுந்தரம், மருமகனான ஆ.சின்னப்பா ஆகியோர் உறுதுணையாக இருந்துள்ளனர்.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி என்கின்ற நாமம் சூட்டப்பட்டமைக்கு பல கதைகள் கூறப்பட்ட போதிலும் பலர் விக்ரோறியா மகாராணியார் இங்கு வந்ததாகவும் அதனால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயர் வந்ததாகவும் எம்மில் பலர் எண்ணக்கூடும் எனினும் அம்மகாராணியார் இலங்கைக்கே வந்ததில்லை என்பதே உண்மையாகும். எனினும் அக்காலப்பகுதியில் 1வது எலிசபெத் மகாராணியின் மூத்த மகன் கொழும்பு உயர்நீதிமன்றத்தை திறப்பதற்காக விஜயம் செய்தபோது அவரை கௌரவித்து அன்பளிப்பொன்றை வழங்க நினைத்த யாழ் மக்கள் ஓர் அழகான நகையை விக்ரோறியா ராணிக்காகச் செய்து அதனை நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் ஊடாக அனுப்பி வைத்தனர். அந்த நகைகளின் வேலைப்பாடுகளைப் பார்த்து மகாராணியின் மூத்த மகன் ஆச்சரியப்பட்டு அதற்கு கைமாறாக யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்க அனுமதி கொடுத்ததுடன் நிதியுதவியும் செய்தார். பின் எமது ஸ்தாபகரைப் பார்த்து உமக்கென்ன வேண்டுமென கேட்டபோது எதுவித சுயநல எண்ணங்களையும் விடுத்து தங்களது அம்மாவின் பெயரில் பாடசாலை ஒன்றை அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். உடனடியாக சுழிபுரம் இந்து ஆங்கிலப் பாடசாலை விக்ரோறியா மகாராணியின் நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியாக மாற்றப்பட்டது.

மேலும் இப்பாடசாலையின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வு யாதெனில், இப்பாடசாலை 1892ஆம் ஆண்டில் அரசாங்க உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டமையாகும். அன்றைய அரசாங்கத்துடன் முதலியார் கனகரத்தினம் அவர்களுக்கு இருந்த தொடர்பு காரணமாகவே பாடசாலைக்கு அரசாங்க உதவிபெறும் வாய்ப்புக்கிடைத்தது என்று கூறலாம். அன்றைய சுழிபுரம் இந்து ஆங்கிலப்பாடசாலை, இலங்கைத்தீவிலே அரசாங்க உதவிபெறும் பாடசாலையாக பதிவுசெய்யப்பட்ட முதற்பாடசாலை என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டது என்று கூறுவதற்கு பெருமைப்படக் கூடியவாறு ஸ்தாபகர் திரு. நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் அவர்கள் (1876-1902) காலப்பகுதியில் பாடசாலை வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைத் தொடர்ந்து இவரது மகனான செல்லப்பா முதலியார் இப்பாடசாலையை நிர்வகித்து வந்தார். இவர்கள் நிர்வகித்த காலங்களிலேயே மிகவும் பிரபல்யம் பெற்ற அதிபர்களான திரு.நாராயண மேயர், வில்லியம் ஸ்மோல் மற்றும் சிவபாத சுந்தரனார் ஆகியோர் கடமையாற்றினர்.இவர்களது பெயர்களில் தான் தற்போது விளையாட்டுப் போட்டிக்கான இல்லங்களுக்கு சூட்டப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

1905 ஆவணி 24ஆம் நாள் இடம்பெற்ற இதே போன்ற பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் இந்நாட்டின் தேசாதிபதி சேர்.ஹென்றி பிளேக் தம்பதியினர் தலைமை வகித்து சிறப்பித்தமையால் கல்லூரிக்கு பெருமை சேர்ந்தது. அன்றைய விழாவில் அவர்களால் றிட்ஜ்வே ஹால் (Ridgeway Hall) என்ற புதிய மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

முதலியார் கனகரத்தினத்தின் புதல்வரான திரு.சி.எம்.செல்லப்பாவின் முயற்சியினாலேயே இம் மண்டபம் உருவாகியது. இம்மண்டபத்தை செல்லப்பா முதலியார் அவர்களின் உறவினர்களால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது.

1943இல் அவர் இறக்கும் வரை 40 வருட காலமாகப் பாடசாலையை நிர்வகித்து வந்துள்ளார். இவர் தன் வாழ்நாள் முழுவதையுமே பாடசாலையின் அபிவிருத்திற்காக செலவு செய்தார் என்று கூறினால் மிகையில்லை. செல்லப்பாவின் பாடசாலை என்று கூறுமளவிற்கு அவர் சேவை அமைந்தது. அவர் இப்பாடசாலைக்காற்றிய சேவைகள் இன்றும் பசுமை நினைவுகளாக நிற்கின்றன.

செல்லப்பா முதலியார் காலமான பின் அவரது மனைவி அன்னப்பிள்ளை நிர்வாகத்தை பொறுப்பேற்றார். எனினும் தான் ஓர் பெண்ணாக இருப்பதால் அவரது சகோதரரின் மகனான Post Master தம்பையா அவர்களை நியமித்து மிகவும் கஷ்ரமான சூழ்நிலையிலும் கூட இந்த பாடசாலையை நிர்வகித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் 1946ஆம் ஆண்டளவில் இக்கல்லூரி அரச கல்லூரியாக பொறுப்பேற்கப்பட்டது. அன்று ஸ்தாபகரின் குடும்பத்தவர்கள் எடுத்த தீர்க்கதரிசனமான முடிவு இன்று இந்த கல்லூரி இந்தளவு புகழையும் கீர்த்தியையும் பெறுவதற்கு அடி கோலியது என்பதை தெட்டத் தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே இந்த தன்னலமற்ற இந்தப் பாரிய பணியை செய்த ஸ்தாபகர் பெருந்தகையை மட்டுமன்றி அவர்கன் குடும்பத்தினரையும் ஒவ்வொரு வருடமும் நினைவு கூறுவது பொருத்தமானதாக அமைய வேண்டுமென இங்கு கூடியிருக்கும் அனைவரையும் வேண்டி நிற்கின்றேன்.

அத்துடன் இந்நினைவு நாளிலே எனக்கு வழங்கப்பட்ட அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி எமது மக்களுடன் அன்றாட வாழ்க்கையில் மிகவும் தொடர்புபட்டதும் நன்கு அறிந்திருக்க வேண்டிய தற்கால சூழ்நிலைக்கேற்ற எனக்கறிந்த விடயங்களை உங்களுடன் பகிரலாம் என்று விழா தலைவரின் முன்னனுமதியுடன் உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

குடாநாட்டிலே பாரியளவில் அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை நாம் அனைவரும் நன்கு அறிந்த ஒரு விடயமாகும். இத்திட்டங்களினூடாக எமது பிரதேசத்தின் அபிவிருத்தி மேன்மையடைகின்ற போதிலும், எமது பிரதேசத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பிரதான வளங்களான நீர் மற்றும் நில வளங்கள் பாதிப்படையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமான விடயமாகும். பிரதேசத்தின் சுற்றுசூழல் தொடர்பான அச்சுறுத்தல்கள், அவற்றிற்கான பாதுகாப்பு போன்ற விடயங்களை கருத்திற் கொண்டே அநேகமான அபிவிருத்தி திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு முன்மொழியப்படுகின்றபோதிலும், முன்மொழிவுகள் முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலைமையே காணப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. குறிப்பாக நிலவளங்களாக கருதப்படும் மணல் மற்றும் சுண்ணாம்பு கற்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி அகழ்வு செய்யப்பட்டு வருகின்றமை இதற்கு, கண்முன்னே தெரியும் நல்ல முன்னுதாரணமாகும். இந் நிலை தொடர்ந்தால், எதிர்காலத்தில் எமது பிரதேசம் பெரும் இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படும்.

அவ்வாறே குடாநாட்டின் நீர்வளம் குறிப்பாக தரைக்கீழ் நீர்வளம் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பாக என்றுமில்லாதவாறு தற்போது நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத்துடன் தரைக்கீழ் நீர்வளம் முறையாக பாதுகாக்கதவறியமையால் நாம் ஏனைய மாவட்டங்களிலிருந்து எமது தேவைகளுக்காக நீரைப்பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருக்கின்றோம்

எமது பிரதேச அரிய வளமான நீர் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் நோக்கில், நீர் வளம் உரிய முறையில் பேணப்படாமையாலும் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்படாமையினாலும் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக இத்துறை சார்ந்தவன் என்ற ரீதியிலும் யாழ்ப்பாண தரைக்கீழ்நீர் வளத்தை பேணுவதற்காக நீர்ப்பாசன திணைக்களம் சார்பில் பல அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதிலும் பங்கு வகிப்பவன் என்ற ரீதியிலும் இவ் விடயம் தொடர்பாக "யாழ்குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளப் பாதுகாப்பு" எனும் தலைப்பில் இன்றைய இந்த நிறுவுனர் நினைவுரையில் எனது கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதோடு இதனூடாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி இச்சவாலை எதிர்கொள்ள அனைவரும் தங்களது பங்களிப்பைச் செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வட்டமும் குடாநாட்டின் தரைகீழ் நீரின் அமைப்பும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாடு வானம் பார்த்த பூமியாக மழை நீரையே பெரிதும் நம்பியிருக்கின்றது. எமது நாடு 103 ஆற்றுப்படுக்கைகளைக் கொண்டிருப்பினும் குடாநாட்டின் பூகோள அமைப்பின் காரணமாக எவ்வித ஆறுகளையும், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. ஆகையால் மழை நீரினால் உருவாகும் தரைக்கீழ் நீரே பிரதான நீர் வழங்கும் மூலமாகக் கொள்ளப்படுகின்றது. இத் தரைக்கீழ் நீர் வளமே குடாநாட்டின் மனித வாழ்விற்கும் வளத்திற்கும் குறிப்பாக குடாநாடு சிறந்த ஓர் விவசாய பிரதேசமாக விளங்குவதற்கு இங்கு கிடைக்கும் தரைக்கீழ் நீர்வளமே காரணமாகும். எனினும் தேவையான நீரைப் பெறுவதென்பது இப் பிரதேச மக்களுக்கு ஓர் தொடர் பிரச்சனையாகவே உள்ளது.

யாழ்குடாநாட்டின் தரைக்கீழ் நீரை அறிஞர்கள் "Life Blood" உயிர் வாழ்வதற்கான குருதி என அழைப்பார்கள். குடாநாட்டின் நீர் வளமானது நடைமுறைக் கணக்கை வங்கியினுள் பயன்படுத்துவது போன்றதாகும். ஏனெனில் மழை காலங்களில் மழை நீரானது நிலத்தடி நீராக சேமிக்கப்படுகின்றது. ஏனைய காலங்களில் நீரை தேவைக்கேற்றால்போல் கிணற்றின் மூலமோ ஏனைய வழியிலோ நீரை இறைத்துப் பெறுவதாகும். எனினும் வைப்பைவிட கூடுதலாக எடுக்க வேண்டியேற்படின் அது ஓர் விபரிதமாக போய்விடும்.

இங்கு வருடாந்தம் சராசரியாக 1270 மிமீ பெறப்படும் மழைவீழ்ச்சியானது கூடியளவு அண்ணளவாக 87% ஆனது வடகீழ் பருவ மழையின் மூலம் ஐப்பசி தொடக்கம் மார்கழி வரை பெறப்படுகின்றது.

மழைநீரானது 80% அளவில் நிலத்தினுள் புகும் (Infiltration) அவ்வேளை மிகுதி 20% வெள்ள ஓட்டமாக (Flood run-off) மேற்பரப்பினூடாக கடலினுள் செல்கின்றது.. எனினும் நிலத்தினுள் புகும் நீரானது தாவரங்களின் வாழ்வுக்கு உறுஞ்சும் இழப்புக்கள் நீங்க கிட்டத்தட்ட 30% ஆகும். அதிலும் 15-30% நிலத்தின் கீழாக நீரோட்டத்தின்(Sub-surface flow) மூலம் கடலுடன் செல்கின்றது. ஆகவே மழைநீரினால் எமக்கு கிடைக்கும் தரைக்கீழ்நீரின் அளவு மிகவும் சொற்பமே. ஆனால் எமது தேவையோ மிக அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**TYPICAL SECTION OF THE GROUND WATER LENS OF JAFFNA**




**OVER EXPLORATION OF GROUND WATER LENS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை நீரானது நிலத்தினுள் ஊடுருவி நீரப்பீடத்தில் (Aquifer) சேமித்து வைக்கப்படுகின்றது. "மயோசின்" சுண்ணாம்புக்கற் பாறைகளைக் கொண்ட நீரப்பீடமே பிரதானமாகக் காணப்படுவதுடன் இச் சுண்ணாம்புக் கற்களுடன் இசைவுத்தன்மை கொண்ட செம்மண் செம்மஞ்சள் மண் ஆகியனவும் காணப்படுகின்றன.

இச் சுண்ணாம்பு கற்பாறைப்படையிலுள்ள வெடிப்புக்கள், பிணைப்புக்கள் மற்றும் உட்புகும் தன்மையினால் மழைநீரானது இப்பகுதியை இலகுவாக ஊடுருவி தரைக்கீழ் நீரானது சேமித்து வைக்கக்கூடிய சிறப்பியல்பைக் கொண்டுள்ளன. இம்மயோசின் சுண்ணாம்புக் கல்லானது 400 அடிவரை உள்ளதுடன் அதன் கீழ் மணல் காணப்படுகின்றது.

இவ்வாறு சேமிக்கப்படும் நீரானது நன்னீர் வில்லையாக உவர்நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கிறது. இவ்விரு வில்லைகள் ஒன்றன் மீது ஒன்று கவிழ்க்கப்பட்டவாறான ஒரு கிண்ண அமைப்பைக் கொண்டுள்ளது. இவ் உருவம் இங்கு நடுவில் பெருத்தும் ஓரங்கள் சிறுத்தும் காணப்படும். எனவேதான் குடா நாட்டின் கரையோரப் பகுதியிலிருந்து மையப்பகுதியை நோக்கி செல்லும் போது இவ் வில்லையின் தடிப்பு அதிகரித்துச் செல்கின்றது.

அவ்வாறே இவ்வில்லையானது மழைகாலங்களில் பெருத்தும் கோடைகாலங்களில் சிறுத்தும் காணப்படுகின்றது. அத்துடன் வலுக்கூடிய பம்பிகளை பாவித்து நீர் இறைக்கும் போது நன்னீர் மற்றும் உவர்நீர் வில்லைகளின் தொடுபரப்பு மேல்நோக்கிச் செல்வதால் கிணற்றுநீர் உவர்நீராகமாற அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்கள் கடற்கரை அண்டிய பகுதிகளில் கூடுதலாக நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரைக்கீழ் நீர் தொடர்பான அச்சுறுத்தல்

குடாநாட்டைப் பொறுத்தவரை தரைக்கீழ்நீர் வளமே நீரை வழங்கும் மூலமாக காணப்படுவதுடன். இது ஒரு வரையறுக்கபப்பட்ட அளவில் காணப்படுகின்றது. எனினும் சனத்தொகை வளர்ச்சியினூடாக விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட்ட பல்வேறு தேவைகளுக்காக இந்நீர்வளம் அதிகளவில் உறுஞ்சப்பட்டு, சுற்றுச்சூழலில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இச் செயற்பாடுகள் இயற்கையின் சமநிலையை பிறழ்வுநிலைக்கு கொண்டு செல்வதற்கு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வழிவகுக்கின்றவையாகவே அமைகின்றது எனவே தரைக்கீழ் நீரை பாதுகாப்பதற்கு விரைந்து செயற்படாதுவிடின் எமது நன்னீர் வளத்தின் எதிர்கால இருப்பு கேள்விக்குறியாகும் என்பது மறுக்க முடியாத உண்மை எனலாம். இயற்கையின் கொடையான இத்தரைக்கீழ் நீர் வளமானது அண்மைக் காலத்தில் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றமையை நாம் காண்கின்றோம். இவ் அச்சுறுத்தலுக்கான பல்வேறு இயற்கை காரணங்கள் கூறப்படினும் மனித செயற்பாடுகளால் இத்தரைக்கீழ் நீர்வளம் மாசடைவதனை அவதானிக்க முடிகின்றது. இதற்கு நல்ல உதாரணங்களாக முன்னைய காலங்களில் மனித பாவனைக்கான நீரானது குடாநாட்டிலுள்ள 100,000 க்கும் மேற்பட்ட கிணற்றிலிருந்து மனித வலு மூலம் இறைத்துப் பெறப்பட்டது. எனினும் தற்போது பாசன முறையிலான விவசாயச் செய்கை, உப உணவுச் செய்கை எனும் சிறப்பானதும் செறிவானதும் நவீனத்துவமானதுமான பயிர்ச்செய்கை முறையாக மாறியதன் விளைவாக நீர் இறைக்கும் இயந்திரத்தின் பாவனை யாழ் குடாநாட்டின் சகல கிராமங்களிலும் அதிகரித்து வந்துள்ளது. அத்துடன் யாழ் குடாநாட்டின் எந்தப் பகுதியும் கடலிலிருந்து ஆகக்கூடியது 15 கி.மீ. தொலைவுக்குள் அமைந்திருப்பதால், அதிகமான வலுக்கூடிய பம்பிகள் மூலம் நீர் இறைக்கப்படும்போது, நிலத்தடி சுண்ணாம்பு படலத்திலுள்ள வெடிப்புகளினூடாக கடல்நீரானது உட்புகுந்து நிலத்தடி நீரையடைகிறது. அதனால் 30% கிணறுகள் தற்போது உவர்ப்பாக மாறியுள்ளன. இக்கிணறுகள் முன்னொருபோதும் உவர் நீரைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவை போன்ற செயற்பாடுகள் பல நடவடிக்கைகள் கடந்த 1950ம் ஆண்டின் பிற்பகுதியிலேயே அதிவேகமாக செயற்படுத்தியதன் விளைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையான தரைக்கீழ் வளத்தின் சமநிலைமாற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நன்னீரில் ஏற்படும் மாசுத்தன்மை அண்மைக் காலத்தில் மிக வேகமாக அதிகரித்துச் செல்வதை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. எனினும் மக்களால் இனங்காணப்படும் மாசுக்களான நன்னீரில் ஏற்படும் உவர்நீர் சேர்க்கை போன்றவற்றை தவிர்க்க முயலலாம். எனினும் சாதாரண மக்களால் இனங்காணப்படமுடியாத பரிசோதனைகள் வாயிலாகவே அறியக்கூடிய மாசுக்கள் கொண்ட நீரை பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றார்கள். அண்மையில் யாழ் பல்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் எமது சுழிபுரம் பண்ணாகம் போன்ற பகுதியில் ஏனைய இடங்களைவிட குடிநீரில் தீங்கு விளைவிக்கப்படக் கூடிய மக்னீசியம் (Mg) அதிகளவாக காணப்பட்டதாக அறியப்பட்டுள்ளது. எனினும் இந் நீரை எமது மக்கள் பல தேவைகளுக்கு பாவிக்கும் போது பல தீங்குகளை விளைவிக்கின்றன. உதாரணமாக Cancer இங்கு தீவிரமாக பரவுவதற்கு சுத்தமான நீரை பருகாமையே காரணம் என அறியும் போது நாம் எந்தளவு தரைக்கீழ் நீரை பாதுகாத்து வைத்திருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பின்வரும் செயற்பாடுகள் தற்காலத்தில் யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் சில விடயங்களாகவும், அச்சுறுத்தலாகவும் கொள்ள முடியும்.

- தரைக்கீழ் நீரை மிகையாக அகழ்ந்து (Over Extraction) எடுப்பதால் ஏற்படும் நன்னீருடனான உவர் நீர்ச்சேர்க்கை (Salination)
- விவசாய கிருமிநாசினிகள் மற்றும் உரவகைகளின் அதீத பாவனை
- திண்ம மற்றும் திரவ கழிவுகள் மூலம் ஏற்படும் மாசுக்கள்
- பௌதீக நீர்வளங்களின் செயற்பாடுகள் அழிகின்றமை.
- நன்னீர் பாதுகாப்புத் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இன்மை

இவ்வாறான மேற்போன்ற விடயங்களில் அதிக கவனத்தை செலுத்த வேண்டியவர்களாக நாம் அனைவரும் இருப்பதுடன் இவ் அச்சுறுத்தலை எதிர்கொண்டு இத்தரைக்கீழ் நீர்வளத்தை பாதுகாப்பதன் ஊடாக அடுத்த தலைமுறைக்காவது இக்கட்டான இந்நிலையில் இருந்து பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தரைக்கீழ் நீரை பேணும் நீர் நிலைகளும் அவற்றின் அபிவிருத்தியும்

யாழ் குடாநாட்டில் பாரிய குளங்கள், ஆறுகள் இல்லாத போதும் மழைநீரினால் வரப்பிரசாதமாக கிடைக்கும் நீரானது வீணே கடலுக்கு செல்லவிடாது தரைக்கீழ் நீரை பேணுவதற்கு உகந்த பௌதீக அமைப்புகளைக் கொண்ட நீர் நிலைகள் இங்கு காணப்படுகின்றன. இவற்றை இப்பிரதேச மக்கள் சிறியளவிலான ஏற்று நீர்ப்பாசனம் மற்றும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட போதிலும் இதன் முக்கிய செயற்பாடாக தரைக்கீழ் நீர் மீள்நிரப்பு (Re-charge) நிலையமாக பயன்படுகின்றது. அவ்வாறான பௌதீக நீர் வளங்கள் பின்வருமாறு

1. கிணறுகள் (Wells)
2. குளம், குட்டைகள் (Tanks & Ponds)
3. உவர்நீர்த் தடுப்பணைகள் (Salt Water Exclusion Scheme)
4. யாழ் கடல் நீரேரித்திட்டம் (Jaffna Lagoon Scheme)

a) வடமாராட்சி நீரேரித்திட்டம் (Vadamarachchi Lagoon)

b) உப்பாறு நீரேரித்திட்டம் (Upparu Lagoon)

c) ஆனையிறவு நீரேரித்திட்டம் (Elephantpass Lagoon)

மேற்போன்ற கட்டுமானங்கள் எமது பிரதேசத்தில் இங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக முறையாக பராமரிக்கப் படாமையாலும் முற்றாக நிறைவேற்றப்படாததாலும் திருப்திகரமாக இயங்கு நிலையில் இல்லாமல் இருப்பதால் இத்திட்டங்களால் ஏற்பட இருந்த உரிய நோக்கங்கள் நிறைவு செய்யப்படவில்லை இதனால் எமது தரைக்கீழ் நீர்வளத்தை பாதுகாக்க முடியாதவர்களாக இருக்கின்றோம்.

அபிவிருத்தி என்கின்ற இக்கால சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி இவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இவற்றை இயங்கு நிலைக்கு கொண்டுவரமுடியும். எனினும் தற்போது அரசாங்க மற்றும் நிதி நிறுவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பல வேலைகள் புனரமைக்கப்பட்டு வரும் வேளை சில பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கிணறுகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் "மயோசீன்" சுண்ணக்கற் பாறைப் படிவுகள் வன்னிப் பிரதான நிலப்பகுதியை போலன்றி ஆழமற்ற மேற்பாகத்திலும் காணப்படுவதால் அதிக ஆழமற்ற கிணறுகளை தோண்டுவதன் மூலம் தரைக்கீழ்நீரைப் பயன்பாட்டிற்காக இலகுவாக மேலே கொண்டுவர முடிகின்றது. இச்செயற்பாடு யாழ்ப்பாணத்தில் மனித வாழ்வு ஆரம்பமாகிய கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கிணறுகள் தோண்டி தரைக்கீழ் நீரைக் குடிப்பதற்காகவும் மக்கள் பயன்படுத்தி வந்துள்ளமைக்கான சான்றுகள் நிறைய உண்டு.

கிணறுகளில் இருந்து மனித சக்தியால் குறிப்பாக துலா மூலமும் உள்ளூர் சூத்திர முறையாலும் நீரானது பாசனத்திற்கு பெறப்பட்டு வந்துள்ளது. பொதுவாக கிணறுகள், அளவெட்டிப்பகுதியில் காணப்படுகின்ற சூத்திரக் கிணறுகள், தென்மராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் "துரவு" என அழைக்கப்படும் அமைப்புக்கள் போன்றன தரைக்கீழ் நீர்வளத்தை சேமிக்கும் கருவிகளாக செயற்படுகின்றது.

இத்தகைய சில நீர்நிலைகள் பிரத்தியேகமான சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக குடாநாடு உருவாகும் போது இயற்கையாக உள்ள Solution Cavity என்கின்ற நீரோட்டத்தில் ஏற்பட்ட பாரிய குழியே நிலாவரை கிணறாக தோன்றி 150 அடிக்கு மேல் ஆழமாக உள்ளதுடன் 15 அடிக்குள் நல்ல நீராகவும் பின்னர் உவர்நீராகவும் காணப்படுகின்றது. நிலாவரைக் கிணற்று ஊற்றானது தரைக்கீழ் வழியாக கீரிமலைக் கேணியுடன் கடலுடன் தொடுகையுறுவதுடன் இக்கிணறு எக்கோடை காலத்திலும் வற்றாத கிணறு எனும் சிறப்புடன் காணப்படுகிறது. இவ்வாறே கரவெட்டிப் பகுதியிலுள்ள அத்துளுக்கிணறும் ஊரெழுவிலுள்ள பொக்கணைக் கிணறும் குரும்பசிட்டியிலுள்ள பேய்க் கிணறும் புன்னாலைக்கட்டுவன் குளக்கிணறு, அல்வாய் மாயக்கைக்குளம், கீரிமலைக்கேணி, இவ்வகையில் அமைந்த குகைப்பள்ளங்கள் ஆகும். மேலும் கடற்கரை அண்டிய பகுதிகளில் Spring பாய்ச்சல் பருவப்பெயர்ச்சி மழையின் பின்னர் ஏற்படுகின்றது. கீரிமலைப்பகுதியில் கூடுதலாக காணப்படுவதுடன் கீரிமலை கேணியடியில் தொடர்ச்சியான ஓட்டத்தையும்(perinnial) காணலாம். இதற்கு காரணம் இப்பகுதி கடல் மட்டத்தில் இருந்து சற்று ஆழமாக உள்ளமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. குளம், குட்டைகள்

யாழ்ப்பாண குடாநாட்டின் சுண்ணக்கற் புவியமைப்பின் காரணமாக சுண்ணக்கற் கரைசலால் ஏற்பட்ட 1000 மேற்பட்ட குளங்கள் காணப்பட்டன. எனினும் இவற்றில் 50% இற்கு மேற்பட்ட குளங்கள் கைவிடப்பட்டும் அழிக்கப்பட்டு நிலங்களாக மாற்றப்பட்டும் இருப்பதை அறியலாம். இதை தரைக்கீழ் நீரைப் பாதுக்காக்கும் விடயத்தில் சாதாரணமாக எடுக்க முடியாது.

இவை மழைக்காலங்களில் நீரைச்சேமிக்கும், குட்டைகள் இக்குளங்களில் நிறையும் தண்ணீரில் பெரும்பகுதி தரையின் கீழ் சென்று நீர்வளத்தை அதிகரிக்கச் செய்யும் அதேவேளை சிறியளவில் விவசாயத்திற்கு ஏற்று நீர்ப்பாசனம் (Lift Irrigation) மூலம் வழங்கப்படுகின்றது.

ஆனால் இவ்வாறான குளங்களால் குப்பை கூழங்கள் கொட்டப்படுவதாலும் தூர் சேர்ந்தமையினாலும் தற்போது பல குளம், குட்டைகளின் கொள்ளளவு குறைவது அவதானிக்க முடிகின்றது. மேலும் தோட்டங்களை இளக்குவதற்கு குளங்களின் மண், மக்கி எடுக்க அனுமதிக்கும் முறை இங்கு உண்டு. இதில் மிக்க அவதானம் தேவை. குளங்களை தரைக்கீழ் நீர்ப்பீடம் வெளித்தெரியக்கூடிய அளவிற்கு ஆழமாக்கவிடுதல் கூடாது. இவ்வாறு நிகழின் குளங்கள் மூலம் தரைக்கீழ் நீர் பெருமளவு ஆவியாக வெளியேறிவிடும்.எனவே குறிப்பிட்ட ஆழம் வரையே மண் எடுக்க அனுமதிக்க வேண்டும்.

எனவே நாம் இவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறான குளங்களை துப்பரவு செய்தலும் தூர் அகற்றுதலும் அவசியம். இங்கு இவ்வாறான பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனினும் நிதி உட்பட பல்வேறு காரணிகளால் முழுமையாக புனரமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

குளம், குட்டைகளை பராமரித்து பாதுகாப்பதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களமே பொறுப்பாக இருந்து பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கையாற்றின் படுக்கைப் பகுதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. வழுக்கையாறு வடிகால்வாய் திட்டம்

எமது பிரதேசத்தில் ஆறுகளோ குளங்களோ இல்லை எனக்குறிப்பிட்டிருந்தேன். எனினும் வழுக்கையாறு என்கின்ற ஆறு உள்ளதென நீங்கள் நினைக்கலாம் ஆனால் வழுக்கையாறு என்பது ஓர் ஆறு அல்ல. இது ஒரு வடிகால்வாய் திட்டமாகும் இது வலிகாமத்தின் மத்திய பகுதியின் அமைந்துள்ளது. இதன் தோற்றுவாய் தெல்லிப்பளையாகவும் (30 அடி கடல் மட்டத்தில் இருந்து) அதன் முடிவிடம் அராலியாகவும் (அண்ணளவாக 1.5 அடி கடல் மட்டத்தில் இருந்து) ஆக உள்ளது. இது தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேசசெயலாளர்கள் பிரிவுப் பகுதிகளுக்கு ஊடாக செல்கின்றது. இது 57 சதுர கி.மீ நீரேந்து பரப்பளவைக் கொண்டது.

இத்திட்டமானது 1948 ஆம் ஆண்டு திட்டமாக உருவாக்கப்பட்டு பின்வரும் காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

- தரைக்கீழ் நீரை மேம்படுத்துதல்
- கடல் நீர், பயன்தரு பிரதேசத்தினுள் உட்புகுவதை தடுத்தல்
- பருவகாலப் பயிர்ச்செய்கைக்கு பாதிப்பு இல்லாமல் மேலதிக வெள்ளநீரை வெளியேற்றுதல்

**வழுக்கையாற்றின் பிரதான கட்டுமானங்கள்**

- பிரதான வாய்க்கால் **(Main Channel)** - 16 கி.மீ
- கிளை வாய்க்கால் **(Tributory Channel)** - 08 எண்.
- குளங்கள்
  - பிரதான வாய்க்காலில் உள்ளவை **(Intermittent Ponds)** - 06 எண்.
  - கிளை வாய்க்காலில் உள்ளவை **(Tributory Ponds)** - 15 எண்.
  - வழுக்கையாற்று நீரேந்துபிரதேசத்திலுள்ளவை **(Independent Ponds)** - 41 எண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கையாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬ அராலி பறாச் (Barrage)

அரைப்பிறைவடிவிலான இக்கட்டுமானம் கல்லுண்டாய்ப் பகுதியில் அமைந்துள்ளது கடல்நீரை நன்னீருடன் கலக்கவிடாது மேலதிக வெள்ளநீரையும் வெளியேற்றும் வகையில் கதவு அமைப்பையும் கொண்டுள்ளது.

- கதவின் எண்ணிக்கை - **10**
- வானின் நீளம் - 105 அடி

எனினும் இவ்வழுக்கையாறானது உரிய கவனிப்பின்மையும் போதிய பராமரிப்பின்மையும் மற்றும் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாகவும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பிரதானமாக எமது தரைக்கீழ் நீர்வளமே பின்வரும் பாதிப்புகள் ஏற்படுத்தின.

- ➢ கடல்நீர் பறாச்சினூடாக உட்புகுவதால் நிலங்கள் உவர்நீராக மாறியமை.
- ➢ வெள்ளநீர் வயல்நிலங்களில் தேங்கி அழிவை ஏற்படுத்தியமை.
- ➢ குளத்தினுடாக நிலத்திற்குள் நீர் புகும் வீதம் குறைவடைவதால் நிலத்தடி நீர் மட்டம் குறைவடைந்து உவர்த்தன்மையாகுதல்

எனினும் 2008 ம் ஆண்டளவில் உலக வங்கியின் இலகு கடன் நிதிஒதுக்கீட்டுடன் வழுக்கையாறில் உள்ள கட்டுமானங்கள், மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது அராலி பறாச் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதால் கடல் நீர் முற்றாக நிலப் பகுதிக்கு வருகின்றமை தடைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறே ஏனைய கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றமையால் மழை காலங்களில் மேலதிக வெள்ள நீர் சீராக வெளியேற்றப்படுவதுடன் நீர் தேக்கி வைக்கவும் முடிகின்றது.

இத்திட்டங்களால் குறிப்பிடும்படியான முன்னேற்றங்களாக வழுக்கையாறு பிரதேசத்திலுள்ள உவர்நீராக மாறியிருந்த கிணறுகள் நன்னீராக மாறுவதை எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் உவர்நீர் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் அறியக் கூடியதாகவுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களமே இதை பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. உவர்நீர்த் தடுப்பணை திட்டம்

## (Salt Water Exclusion Schemes)

இத்திட்டமானது பொதுவாக கடலை அண்டிய தீவுப்பகுதிகளிலே தரைக்கீழ் நீர்வளத்தையும் நிலவளத்தையும் மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. இது பெரும்பாலும் கடல்நீர் புகும் ஓடைகளிலே அமைக்கப்படுகின்றது. எனினும் அராலி பொன்னாலை கடற்கரையோரமாக 7 கிலோமீற்றர் நீளமான தடுப்பணை போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தினூடாக கடல்நீர் நிலப்பகுதியின் ஊடுருவலை தடுக்கும் அதே வேளை மழை காலங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் மேலதிக நீர் வடிகாலின் ஊடாக கடலை சென்றடைகின்றது அத்துடன் மழை நீரை சிறிதளவு சேமித்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

குடாநாட்டை பொறுத்தவரை 34 உவர்நீர்த் தடுப்பணைகள் குறிப்பாக தீவுப்பகுதியில் இனங்காணப்பட்டுள்ளன. மேலும் பல தடுப்பணைகள் அமைக்க வேண்டிய தேவையும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. எனினும் உரிய பராமரிப்பு இல்லாமல் உவர்நீர்த் தடுப்பணைகள் அதிகமானவை பழுதடைந்துள்ளமையினால் கடல்நீரானது நிலத்தினுள் வந்தமையால் நிலத்தடி நீர் உவர்நீராக மாறி பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களும் பழுதடைந்து செய்கை பண்ண முடியாமல் உள்ளது. இதன் காரணமாக தீவுப்பகுதி மக்கள் வன்னிப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற திட்டங்களுக்கு தமது சொந்த இடங்களை விட்டு குடியேறி விவசாயம் செய்ய முனைந்தனர். எனினும் தற்போது 17 உவர்நீர்த் தடுப்பணை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் ஏனைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உடனடியாக பாரிய மாற்றத்தை பெறமுடியாது விட்டாலும் நீண்ட காலத்தில் உவர்நிலங்களை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தலாம் என்பதை அப்பகுதியில் நீரில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை வைத்து உணரக்கூடியதாக இருக்கின்றது.

இத்திட்டங்கள் தற்போது நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டதுடன் அவற்றை பராமரித்து இயக்கி திட்ட நோக்கத்தை நிறைவு செய்வதும் அவர்களின் சவாலான பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நீரேரித் திட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. யாழ் நீரேரித்திட்டம்

(**Jaffna Lagoon Scheme**)

"யாழ்ப்பாணத்திற்கான ஆறு" **(River for Jaffna)** என்று பிரபல்யமாக அழைக்கப்படும் இத் திட்டமானது ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன்பே குடாநாட்டிற்கான நன்னீர் விருத்திக்காக ஒல்லாந்தர் காலத்திலே முன்மொழியப்பட்டது. யாழ் குடாநாட்டில் ஆறுகள் இல்லாத போதும் வன்னிப் பிரதேசத்தில் காணப்படும் ஆறுகள் ஊடாக கிடைக்கும் மேலதிக நீரை ஆனையிறவு கடல்நீரேரி ஊடாக குடாநாட்டிற்கு அனுப்பி ஒரு இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் இதை ஓர் ஆறாக கருதப்படுகின்றது.

மேலும் இத்திட்டத்தில் கடல்நீரேரிகள் மூன்று உள்வாக்கப்பட்டதுடன் இவற்றை நன்னீர் ஏரிகளாக மாற்றும் திட்டமே இதன் முக்கியமாக கருதப்படுகின்றது. எனினும் இது விடயமாக தொடர்ந்து பல அறிஞர்களால் சாத்தியவள அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இத் திட்டத்தின் ஒருபகுதி 2 ம் உலக மகாயுத்தத்தின் பின்னரே செயல் வடிவம் பெற ஆரம்பித்தது. குறிப்பாக நீர்ப்பாசன எந்திரி.எஸ்.ஆறுமுகம் என்பவர் 1960 ன் பிற்பகுதியில் இத்திட்டத்தில் கூடிய பங்கு வகித்து இத்திட்டத்திற்கான முழுமையான அறிக்கைகளை தயாரித்து இத்திட்டம் முழுமைபெறபாடுபட்டார். இதனால் இத்திட்டம் ஆறுமுகம் **Plan** எனவும் அழைப்பதுண்டு.

குடாநாட்டிற்குள் உள்ள வடமராட்சி மற்றும் உப்பாறு கடல்நீரேரிகளும் இவை அண்ணளவாக முறையே 77 மற்றும் 26 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டுள்ளதுடன் குடாநாட்டின் அண்ணளவான மொத்தப் பரப்பளவான 1000 சதுர கி.மீ. இன் 10 வீதமாகும். இவ் இரு உப்பு நீர் கடல்நீரேரிகளும் வட கீழ் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சியின் மூலம் நீரேந்து பரப்பான குடாநாட்டின் 50வீதமான பரப்பளவிலிருந்து நீரைப்பெறுகிறது. இதே போல் குடாநாட்டிற்கு வெளியே ஆனையிறவு கடல்நீரேரித்திட்டமும், குடாநாட்டிற்கும் பெரு நிலப்பரப்பிற்கும் இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. இது 77 சதுர கி.மீ பரப்பினைக் கொண்டு குடாநாட்டிற்கும் பெரு நிலப்பரப்பிற்கும் இடையில் உள்ள கடல் நீரேரியாகக் காணப்படுகின்றது.

இத்திட்டத்தினால் பின்வரும் பல நன்மைகன் ஏற்பட வாய்ப்புள்ளதுடன் குறிப்பாக குடாநாட்டிற்கான தரைக்கீழ்நீர்வள அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும்

- யாழ்ப்பாணத்தில் தற்போது உவராக உள்ள 30 வீதமான கிணறுகளின் நீரின் தரத்தில் வியக்கத்தகுந்த முன்னேற்றம் ஏற்படும்.
- நீர் உவர்த்தன்மை அடையாமல், தற்போதுள்ள கிணறுகளிலிருந்து தினசரி நீர் எடுக்கும் அளவை அதிகரிப்பது சாத்தியமாகும். இதனால் விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி மேம்பாடடையும்
- யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏறக்குறைய மேலதிகமாக 13,000 ஹெக்டயர் நிலத்தில் சிறப்பான நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும்.
- வடமராட்சி மற்றும் உப்பாறு கடலேரிகளை அண்மித்துள்ள ஏறக்குறைய 4,400 ஹெக்டயர் நிலங்களில் நெல் மற்றும் பணப்பயிர்களை விளைவிப்பது சாத்திமாகும்.
- ஏற்றுமதி வருமானத்திற்கு ஏதுவான நன்னீர் இறால் வளர்ப்பு கடலேரிக் கரைகளில் ஆரம்பிக்கலாம்.

இத்திட்டத்தின் முக்கிய பகுதிகளான தொண்டமனாற்றிலும் அரியாலையிலும் ஒரு தடுப்பணை 1955 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்யப்பட்டு வடமராட்சி மற்றும் உப்பாறு திட்டங்கள் இயங்க ஆரம்பிக்கப்பட்டது. எனினும் முழுமையான இயக்கத்திற்கு ஆனையிறவு திட்டம் உள்வாங்கப்படல் வேண்டுமென உணரப்பட்டதுடன் குடாநாட்டின் நன்மைக்காக பயன்படுத்தப்பட முடியும் என 1960 ஆம் ஆண்டு திட்டம் மீளமைக்கப்பட்டது. இதன் பிரகாரம் இத்திட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமைப்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இன்னும் முழுமைபெறவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அத்துடன் வடமராட்சி உப்பாறு ஆகிய நீர்நிலைகள் இயங்கிய காலத்தில் குடாநாட்டுக்கான தரைக்கீழ் நீர்வளத்தில் ஏற்பட்ட நன்மைகள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது ஓர் நல்ல அறிகுறியாகவும் தென்பட்டது. இத்திட்டத்தை தொடரந்து முன்னெடுத்து முழுமைப்படுத்துவதன் ஊடாக பாரிய திட்டமாக முன்னேடுக்கப்பட்டு வருகின்ற கிளிநொச்சி யாழ்ப்பாண குடிநீர் விநியோக திட்டத்தின் அவசியம் கேள்விக்குறியாக அமையலாம் என அறிஞர்கள் கூறும் அளவிற்கு இந்த யாழ்ப்பாணத்திற்கான ஆறு திட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இத்திட்டமானது 1960 களில் பகுதியாக மட்டுமே முடிவுறுத்தப்பட்டது. அத்துடன் ஆனையிறவு கடலேரியில் இருந்து வடமராட்சி கடலேரிக்கான முக்கியமான இணைப்பு வாய்க்கால் ஒருபோதும் முடிவுறுத்தப்படவில்லை. வடமராட்சி மற்றும் உப்பாறு கடலேரிகள் நன்னீர் ஏரிகளாக இருந்த குறுகிய காலத்தில் குடாநாட்டிற்கான நன்மைகள் அவதானிக்கப்படககூடியதாக இருந்தது. அத்துடன் பல உவர்நீர்க் கிணறுகள் நன்னீர் கிணறுகளாக மாற்றமடைந்திருந்தன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட இத்திட்டங்கள் வெற்றிகரமாக முழுமையாக நிறைவேற்ற அவர்களது அர்ப்பணிப்பான பங்கு முக்கியமானது. அத்துடன் இத்திட்டத்தின் முழுப்பயனும் சரியான நிர்வகித்தலிலே தங்கியுள்ளதுடன் இதன் பயனை வேலை நிறைவடைந்தவுடன் எதிர்பார்க்க முடியாது. எனவே இத் திணைக்களமே முழுத்திட்டத்தின் முகாமைத்துவம் பராமரிப்பு இயக்குதல் மற்றும் ஆராய்ச்சிகள் போன்ற அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாக இருப்பதன் ஊடாக சிறந்த பயனை விரைவாக அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி கடல் நீரேரித் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.1 வடமராட்சி கடல்நீரேரித் திட்டமும் தொண்டமானாறு தடுப்பு கதவும்

வடமராட்சி கடல்நீரேரியானது பச்சிலைப் பள்ளியில் தொடங்கி கிழக்காக தொண்டமனாறு கடலினூடாக செல்கின்றது. இதன் முக்கியமான தொண்டமானாறு பறாச் கட்டுமானம் 1953ம் ஆண்டில் நிறைவு பெற்றது. இது கடல் நீரை நன்னீரோடு கலக்க விடாமல் தடை செய்வதுடன் மாரி காலங்களில் மேலதிக நீரை வெளியேற்றவும் பயன்படுத்தப்பட்டது.

எனினும் யுத்த காலங்களில் இதன் இரும்புக்கதவுகளும் மற்றும் தடுப்பு மரக் குற்றிகளும் பழுதடைந்தமையால் கடல்நீர் கடந்து இவைகளினூடாக தடையின்றிச் சென்றது. எனினும் தற்போது பூரணமாக புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் சிறந்த செயற்பாட்டு நிலையில் உள்ளது.

இப்புனரமைப்பு நிறைவின் பின்னர் நீரேரியில் எமது நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் உவர்நீர் பரிசோதனைகளின் மூலம் உவர்நீராக இருந்த நீர் நன்னீராக மாறுதற்குரிய அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளது. இது தரைக்கீழ் நீர்வளம் மேம்படுவதற்கான வாய்ப்பை எடுத்துக்காட்டுகின்றது.

**தொண்டமானாறு தடுப்பு அணை(Barrage)தொடர்பான தரவுகள்**

| | |
|---|---|
| நீரேந்துப்பிரதேசம் (Catchment Area) | 115 Sq.miles |
| Total Length of Barrage | 640 ft |
| பெரிய கதவுகள்(No. of Steel Gates - Large) | 18/ 20'- 0"x4'-0" (Upper steel gates)<br>18/ 20'- 0"x3'-0" (Lower steel gates) |
| சிறிய கதவுகள்(No. of Plank Gates - Small) | 16/10'-0"x2'-0" |
| Discharge during normal flood | 22,000 Cusecs |
| கொள்ளளவு (Capacity) | 50,000 Ac.ft |
| Acreage Benefited | 4,000 Acs |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 உப்பாறு கடல்நீரேரித் திட்டமும் அரியாலை தடுப்பு கதவும்

உப்பாறு கடல்நீரேரியானது கப்பூது வயல் நிலங்களில் உருவாகி இடப்புறமாக சரசாலை, மட்டுவில், கைதடி மற்றும் நாவற்குழி ஊடாக சென்று புத்தூர், கோப்பாய் மற்றும் இருபாலையின் வலப்புறமாக சென்று அரியாலையில் கடலுடன் கலக்கின்றது.

இத்திட்டத்தினுள் அரியாலையிலுள்ள தடுப்பு கதவும் (**Barrage**) மற்றும் கப்பூது வாதரவத்தை பிரிப்பு அணை மற்றும் 13 வெள்ளத் தடுப்பு அணைகளையும் கொண்டுள்ளது.

அரியாலையில் குறுக்குத் தடுப்பு அணை (Barrage) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டு 1955ம் ஆண்டில் அரியாலை கட்டுமானம் நிறைவுபெற்றது. எனினும் தொண்டமானாறு போல் இவற்றின் கதவுகளும் வான் கட்டுமானமும் பழுதடைந்து கடல் நீர் கடந்த யுத்த காலங்களில் இவைகளினூடாக தடையின்றிக் கடந்து சென்றது.

எனினும் தற்போது பூரணமாக புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் சிறந்த செயற்பாட்டு நிலையில் உள்ளதுடன். இக் குறுக்குத் தடுப்பு அணை (Barrage) ஆனது கடல் நீரை நன்னீரோடு கலக்க விடாமல் தடை செய்துள்ளது.

### அரியாலை தடுப்பணை(Barrage) தொடர்பான தரவுகள்

| | |
|---|---|
| நீரேந்தும் பிரதேசம் (**Catchment Area**) | **88 Sq.miles** |
| **Spill Length** | **540 ft** |
| கதவுகளின் எண்ணிக்கை (**No. of Gates**) | **42** |
| **Discharge during normal flood** | **18,500 Cusecs** |
| கொள்ளளவு (**Capacity**) | **50,000 Ac.ft** |
| **Acreage Benefited** | **3,000 Acs** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையிறவு கடல்நீர்த் திட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.3 ஆனையிறவு கடல்நீரேரித் திட்டம்

ஆனையிறவுக் கடல் நீரேரியானது குடாநாட்டிற்கும், பெரு நிலப்பரப்பிற்கும் பொதுவாக அமைந்து சுண்டிக்குளத்தினூடக சென்று கடலுடன் கலக்கின்றது. இது வலது புறமாக கண்டி, யாழ்ப்பாண வீதியைக் கொண்டுள்ளது. குடாநாட்டில் நன்னீர் வளத்தை மேம்படுத்துமுகமாக முன்மொழியப்பட்ட ஆனையிறவு கடல்நீரேரியை நன்னீரேரியாக்கும் திட்டம் பற்றிய சிந்தனை பழமை வாய்ந்தது. 1922 இல் இரணைமடுக்குளம் கட்டப்பட்டபோதுகூட ஆனையிறவு கடல் நீரேரியை நன்னீரேரியாக்கும் திட்டம் பற்றியும் கூறப்பட்டிருந்தமை மனங்கொள்ளத்தக்கது. இவ் ஏரியானது குடாநாட்டில் உள்ள ஏரிகளைப் போன்று ஆழம் குறைந்தவையாகக் காணப்பட்ட போதிலும் 77 சதுர கி.மீ நிர் மேற்பரப்பைக் கொண்டு வன்னிப்பிரதேசத்திலுள்ள கனகராயன் ஆறு, நெத்தலியாறு, பிரமந்தலாறு மற்றும் தேறாவில் ஆறுகளில் இருந்து வடகீழ் பருவ மழையினால் வரும் நீரை கொள்ளக்கூடியது. இவ்வாறு ஆறுகளிலருந்து கிடைக்கும் நீரை வடமராட்சி நீரேரியுடாக குடாநாட்டுக்கு அனுப்புவதே அதன் பிரதானமான நோக்கமாகும். இத்திட்டததை முழுமைபெற பினவரும் முன்மொழிவுகள் தெரிவிக்கப்படடிருந்தன.

- நன்னீர் கடலுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக ஆனையிறவுக் கடலேரியின் மேற்குப் பகுதியில் உள்ள ஆனையிறவுத் தாம்போதியில் அமைந்துள்ள வீதி மற்றும் புகையிரதப் பாதையின் பாலங்களின் வெளிகளை அடைத்தல். இவ்வேலை முடிவடைந்துள்ளது.
- ஆனையிறவுக் கடலேரியின் கிழக்குப் பக்க முடிவிடமாகிய சுண்டிக்குளத்தில் நன்னீர் கடலுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக அணைக்கட்டொன்றையும் மற்றும் மேலதிக வெள்ள நீரை கடலுக்குள் வெளியேற்றுவதற்காக வான் ஒன்றையும் அமைத்தல்.
- 4 கி.மீ நீளமும் 12மீ அகலமும் கொண்டதும் நீர்ப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டுக் கதவுகளை உள்ளடக்கியதுமான முள்ளியான் இணைப்பு வாய்க்காலை பூர்த்தியாக்கல்

எனினும் திட்டங்கள் தொடங்கப்பட்டு நிறைவு செய்யாமைக்கு நாட்டின் அசாதாரணசூழ்நிலைக்கு மேலதிகமாக இத்திட்டம் சாத்தியப்படாது என சிலர் எதிர்மறையான கருததுகள் கூறி வருவதும் உண்மையே. எனினும் தற்போதுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி சாத்திய வளங்களை ஆராய்ந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம், எனினும் ஆனையிறவு நீரேரித்திட்ட அபிவிருத்திக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை நிதி ஒதுக்கீடுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் திட்டம்.**

யாழ் நீரேரித்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் குடாநாட்டின் தரைக்கீழ் வளம் பாதுகாக்கபடாமையால் ஏற்பட்ட நெருக்கடியை கருத்தில்கொண்டு குடாநாட்டு மக்களின் குடிநீர் தேவைகளுக்காக இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் திட்டம் வருவதற்கு அடிகோலியது. தற்போதைய நிலையில் குடாநாட்டின் குடிநீர்தேவையை பூர்த்திசெய்யக் கூடிய வளம் அரிதாகவே உள்ளது என்பது உண்மையே எனினும் இரணமடுகுளத்திலிருந்து பெறப்படும் நீரினால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படகூடாது என்பதில் நாம் அனைவரும் கவனம் செலுத்துபவர்களாக இருக்கவேண்டும் ஏனெனில் அம்மக்கள் தங்களது உரிமைகளை இக்குடாநாட்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்க முன்வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு பல ஆய்வுகளின் முடிவில்தான் இரணைமடுக்குளத்திலிருந்து நிரை பெற்று நீரை சுத்திகரித்து கிளிநொச்சி மாவட்டடத்தில் பூநகரி பளை போன்ற பிரதேசங்களுக்கும் கொடிகாமம், சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், வலிகாமம்தெற்கு வலிகாமம்மேற்கு, ஊர்வாகற்றுறை, வேலணை, புங்குடுதீவு மற்றும் காரைநகர் பிரதேச மக்களின் குடிநீர்ப்பிரச்சனையை நிவர்த்தி செய்வதற்காக பயன்படவுள்ளது. இத்திட்டத்திற்கு 164 மில். அமெரிக்க டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கி யினதும் (ADB), பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி (AFD) யின் இலகு கடன் உதவியுடனும் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) நிதி உதவியுடனும் முன்னெடுக்கப்படும் இத்.திட்டமானது 2010 ஐப்பசி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு இதன் ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றது. இத்திட்டமானது 2016 மார்கழி மாதத்திற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கு இரணைமடுக் குளத்திலிருந்து ஒருநாளுக்கு 29,000 கனமீற்றர் நீர் எடுப்பதற்கு திட்டம் வரையப்பட்டுள்ளது. இப்பாரிய நிதி ஒதுக்கீட்டுடனும் கிளிநொச்சி மக்களின் மன உளச்சலுடன் பெரும் தடபுடலாக மேற்கொள்ளப்பட்டுவரும் இத்திட்டம் எமது தரைக்கீழ் நீர்வளம் பாதுகாக்கப்பட்டடிருப்பின் அவசியமற்றதாயிருக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறவிழைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரைக்கீழ் நீர் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

தரைக்கீழ் நீர் வளம் தொடர்பாக பலதரப்பினராலும் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இன்றும் இவ்விடயத்தில் ஓர் வெறுமை நிலை காணப்படுவதாக உணரப்படுகின்றது. தற்போது நீர் சம்பந்தமாக 51 சட்டங்களும் 40 நிறுவனங்களும் வெவ்வேறு மட்டங்களில் சம்பந்தப்பட்டிருப்பினும் ஓர் முறையான ஒழுங்குபடுத்தலின்றி பல முயற்சிகள் இங்கு தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டு வருவதால், இரட்டைத்தன்மை **(Duplication)** குழப்பகரமான நிலை **(Confusion)** போன்றன ஏற்பட்டு இறுதியில் முயற்சிக்கேற்ற பயனை அடையாமுடியாத நிலையே காணப்படுகின்றது.

தரைக்கீழ் நீரின் மீள் நிரப்பும் தன்மையை அதிகரிக்க வேண்டும் என்பதில் பலர் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளபோதும் இச் சவாலை நல்ல முறையில் எதிர்கொள்வதற்கு யாழ்ப்பாண குடாநாட்டில் தரைக்கீழ் நீர்வளம். பாவனை, முகாமைத்துவம், நீர்வள அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலுக்கு புவியியல், பொருளியல் புவிச்சரிதவியல், மண்ணியல், பொறியியல், விவசாய அறிவியல் போன்ற துறைசார் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பாக இயங்குவதனூடாக எமது இலக்கை விரைவாக அடையமுடியும் என நம்புகின்றேன்.

யாழ்ப்பாணப் பிரதேச நீர் வள அபிவிருத்தியை எமக்கு வேண்டுவதான அபிவிருத்தியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் இவ் வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள் திட்டங்களை உருவாக்குவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் அப் பிரதேச வாழ் மக்களின் பங்களிப்புடன் இடம் பெறுதல் வேண்டும். இந்த அடிப்படையைக் கொண்டு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் இப்பிரதேச மக்களுக்கு பயன்தருவதாகவும் நீண்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கும் திட்டச் செயற்பாடாக அமைந்து வெற்றி பெறும் என நம்பலாம்.

மேல் விபரித்த அம்சங்கள் அனைத்தையும் மனங்கொண்டு நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆலோசனைகள் என்பன இங்கே அனைவரதும் அக்கறையான கவனத்திற்கு முன்வைக்கப்படுகின்றது.

எனவே இந்நிலை தொடர்வதை தடுப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் கூடிய அபிவிருத்தியை முன்னெடுப்பதன் ஊடாக தரைக்கீழ் நீர்வள பாதுகாப்பு என்ற இலக்கை எட்ட முடியும்.

ஆகவே எமது கல்லூரியின் ஸ்தாபகர் திரு.நிற்சிங்கம் கனகரட்ணம் முதலியார் மற்றும் Manager செல்லப்பா போன்றோரை நினைவுகூரும் இவ்வேளையில் நான் இங்கு கூடியுள்ளோரையும் ஏனையவர்களையும் விநயமாக கேட்டுக் கொள்வது தரைக்கீழ்நீர் வளத்தை பாதுகாப்பதற்கு பல நடவடிக்கைகள் நிறுவனங்கள் மட்டத்தில் எடுக்கப்படுகின்ற போதிலும் உங்களின் பங்களிப்பு இவ்விடயத்தில் முக்கியமாக அமைவதால் நீங்கள் அனைவரும் பங்குதாரர்களாக மாறுவதனூடாகவே இவ்வரிய முயற்சியை வெற்றியாக மாற்ற முடியும் என நம்புகின்றேன். அதற்காக நான் உங்களுக்கு பாரிய சுமையை ஏற்படுத்த முயலவில்லை. எனினும் எமது ஸ்தாபகர் போன்ற முன்னோர்கள் பாரம்பரியமாக அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து வந்த மழைகாலங்களில் வளவினுள் நீரை வரம்புகட்டி தேக்கி வைத்தல் மற்றும் தூவல், சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நவீன முறைமைகளினூடாகவும் நீரை சிக்கனமாக பாவித்து எமது நோக்கங்களை நிறைவேற்றுவதுடன் எமது பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற அபிவிருத்திகள் நீண்டு நிலைக்க கூடியதாக அமையும் என கூறிக்கொள்வதுடன் இறுதியாக எமது ஸ்தாபகரின் தன்னலமற்ற தூரநோக்குடன் கிடைக்கப்பெற்ற இவ்வரிய சொத்தை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பது போன்று நாம் அனைவரும் தரைக்கீழ் நீர்வளத்தை பாதுகாத்து இந்த சமூதாயத்தில் ஸ்தாபகர் போன்று நன்மை செய்தவர்களாக மாற ஒரு அரிய வாய்ப்பு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை சரியாக பயன்படுத்தி அடுத்த சந்ததியினருக்கு தரைக்கீழ் வளம் தொடர்பான சவாலை ஏற்படுத்தாவண்ணம் இருக்குமாறு அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு ஸ்தாபகரின் நினைவு உரையை நிகழ்த்த இவ் அரிய வாய்ப்பை தந்த பாடசாலை சமூகத்திற்கும் குறிப்பாக இப்பாடசாலையின் முதல்வரும் எனது ஆசிரியருமான வ.சிறிகாந்தன் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்து எல்லாம் வல்ல தேடிவந்த விநாயகரை மீண்டும் நினைந்து அமர்கிறேன்.

நன்றி வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Some Data regarding the water sector in Sri Lanka

- Land area : 65,610 Sq. Km
  - Dry Zone : 49,200 Sq. Km
  - Wet Zne : 16,400 Sq. Km
- Area under water bodies : 2,900 Sq. Km
- Agricultural Land : 37,110 Sq. Km
- Area under Irrigation : 6,000 Sq. Km
- Area under forest : 20000 Sq.Km
- No of revier basins : 103
- Avarage mean rain fall : 1900 mm
- Per capita water availability: 2400 $M^3$
- Population : 19 Mn.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்செல்வி - மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org